**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.368 /2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/ Pw1 |
| Name | : Elavarasan |
| Father/Husband's Name | : Durai |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.

**Accused present.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்ன ரகசிய தகவல் கிடைத்தது என்று எனக்கு தெரியாது. காவல் உதவி ஆய்வாளர் கொடுத்த உத்தரவின் பேரில் சம்பவ இடம் சென்றோம். சம்பவ இடம் செல்வதற்கு முன்பு, சம்பவ இடம் எங்கு என்று தெரியாது. நானும், காவலர் முருகேசனும் சென்றோம். நானும், காவலரும் இருசக்கர வாகனத்தில் சென்றோமா என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு சுமார் காலை 6.30 மணிக்கு சென்றேன். எதிரியை எத்தனை மணிக்கு கைது செய்யப்பட்டார் என்பது ஞாபகமில்லை. எதிரியை சோதனை செய்த போது, அவர் கஞ்சா வைத்திருந்தார் என்பது தெரிய வந்தது. அதை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எதிரியிடமிருந்து கஞ்சாவை கைப்பற்றும் போது பொது மக்கள் யாருமில்லை. காலை நேரம் என்பதால் காலை நேரம் என்பதால் பொது மக்கள் வயல்வெளி வேலைக்கு செல்வார்கள் என்றாலும, வழக்கிற்காக அவ்வாறு யாருமில்லை என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்த பின்பு எத்தனை மணிக்கு காவல்நிலையம் வந்தோம் என்றால் காலை சுமார் 8.00 மணியளவில்

வந்தோம். காவல் உதவி ஆய்வாளர் எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார் என்று ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். சம்பவ இடத்தில் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் எதிரி மீது தவறான வழக்கு பதிவு செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu